**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் (“பல்கலைக்கழகம்”) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 27,979,710 தொகையான முன்னைய | நியமத்தின் பிரகாரம் | இலங்கை |

| | | |
|---|---|---|
| கால பிழை திருத்தம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் பின்னோக்கி சீர்செய்யப்படாமல் மீளாய்வாண்டிற்கான மிகையில் முன்னைய ஆண்டு சீராக்கமாக சீர்செய்யப்பட்டிருந்தது. | சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. ரூபா 766,109,399 கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட பிழையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு மூன்று அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்தல் அவசியமாக இருக்கலாம். எனினும் 2011 இல் ரூபா 450,330,000 பெறுமதியில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பல்கலைக்கழகத்தின் 05 காணிகள் கடந்த 10 வருடங்களாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மீள்மதிப்பீட்டு செயன்முறை விரைவில் பூர்த்தி செய்யப்படும். | -மேற்படி- |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 2,158,550,419 ஆகும், ஆனால் மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அதன் கிரயம் ரூபா 1,923,388,792 ஆகும். ரூபா 235,161,627 வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி வேறுபாட்டை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வேறுபாடுகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதவியணியினர், ஒப்பந்ததாரர் மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 1,876,449 தொகையான மீதிகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாமல் 01 முதல் 20 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலுவையாக காணப்பட்டன. மேலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தங்களை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 18,337,779 பிணைமுறி பெறுமதியில் 12 ஆண்டுகளுக்கும் மேலாக ரூபா 1,043,137 தொகை நிலுவையாக உள்ளது. | சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையாகவுள்ள பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 வருடங்களுக்கு மேலாக காணப்பட்ட ரூபா 687,007 தொகையான செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு பல்கலைக்கழகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செலுத்த வேண்டியவைகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571 | 02 முதல் 08 வருடங்கள் வரையான காலவீச்சில் காணப்பட்ட ரூபா 566,000 தொகையான 80 மீளளிக்கத்தக்க கேள்வி வைப்பு மற்றும் ரூபா 18,267,884 தொகையான 40 பிடித்துவைத்தல் பணம் தொடர்பாக தீர்ப்பனவு செய்வதற்கோ அரசாங்க வருமானத்திற்கு செலவு | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிதிப் பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் உபபிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆம் திகதிய 10/2017 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை கடிதம் | அனைத்து பதவியணியினரும் அவர்களது வருகையை கைவிரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் கல்விசார் பதவியணியினர் அத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை. | பொதுவான நடைமுறையொன்றாக கல்விசார் பதவியணியினரின் வருகை மற்றும் புறப்படுதல்கள் இலங்கை அரச பல்கலைக்கழக முறைமையில் பதிவு செய்யப்படுவதில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 32,976,512 மிகையொன்றாக இருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 19,668,820 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 52,645,332 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு எதிராக மீண்டெழும் மானியம் மீதான வருமானம் மற்றும் சுயநிதியிடல் நிகழ்ச்சித்திட்டத்தின் மீதான தேறிய வருமானம் என்பன முறையே 7 சதவீதம் மற்றும் 40 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் முன்னைய ஆண்டிற்கு எதிராக பணிக்கொடை செலவினம் 35 சதவீதத்தால் குறைவடைந்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தன.

### 2.2 பிரதான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டிற்கான ஆளணி வேதனங்கள் போன்ற பல்கலைக்கழகத்தின் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 86,476,906 தொகையால் அல்லது 7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒவ்வொரு நாளின் இறுதியிலும் REPO வைப்பிலுள்ள பணத்தை வைப்பு செய்து மேலதிக வருமானத்தை ஈட்டுவது ஏனைய பல்கலைக்கழகங்களில் உள்ள பொதுவான | நடைமுறைக் கணக்குகளை ஒரே இரவு (Overnight) முதலீட்டு உடன்படிக்கைகளுடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பணத்தை செயற்திறனாக வைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறையொன்றாக இருந்த போதிலும் பல்கலைக்கழகத்தின் பொறுப்பான அதிகாரிகள் அவ்வாறு செய்யாமல் மீளாய்வாண்டின் ஒவ்வொரு நாளின் இறுதியிலும் நடைமுறைக் கணக்கில் ரூபா 84 மில்லியன் முதல் ரூபா 211 மில்லியன் வரையிலான வீச்சில் தொகையொன்று இருந்தது. | | |
| (ஆ) | லங்கா கல்வி மற்றும் ஆராய்ச்சி வலையமைப்பிலிருந்து (LEARN) வரையறையற்ற தரவு வலையமைப்பு இணைப்பு பெறப்பட்டு 2021 ஆம் ஆண்டுக்டிற்காக ரூபா 12,835,303 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மறுபுறம், 2021 ஆம் ஆண்டிற்கான அதே நோக்கத்திற்காக மொபிடெல் - wifi வசதியை பெற்றுக்கொள்வதற்கு ரூபா 11,869,245 தொகை செலுத்தப்பட்டிருந்தது. தரவு வலையமைைப்பு (data network) இணைப்புக்கான செலவினங்களைக் கட்டுப்படுத்தி குறைப்பதற்கு LEARN வலையமைப்பு சேவையைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதுள்ள நிதி நெருக்கடிகள் காரணமாக முன்மொழிவுகளை அமுல்ப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | செலவினங்களைக் கட்டுப்படுத்தி குறைப்பதற்கு LEARN வலையமைப்பு சேவையைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்கான ரூபா 201,368,432 கிரயமான நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்காததுடன் கடைசியாக 2017 ஆம் ஆண்டு மெய்மையாய்வு நடாத்தப்பட்டது. | இருப்பு மெய்மையாய்வை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்பு மெய்மையாய்வை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட கல்விசார் பதவியணியினரிற்கான நெறிமுறைகள் மற்றும் கல்விப் பொறுப்புக்கூறலின் பிரகாரம் தலைவர், தலைமை பேராசிரியர், | UGC சுற்றறிக்கையின் அடிப்படையில் புதிய திருத்தப்பட்ட வழிகாட்டல் மாணவர்களின் மொத்த தொடர்பு நேரம் மற்றும் கல்விசார் | மொத்த மாணவர் தொடர்பு நேரம் மற்றும் கல்விசார் பதவியணியினரின் மொத்த பணிச்சுமை ஆகியவற்றை பிரதிபலிக்கும் |

| | | | |
|---|---|---|---|
| | பேராசிரியர், சிரேஷ்ட விரிவுரையாளர், விரிவுரையாளர், பயிற்றுவிப்பாளர் தரம் I மற்றும் பயிற்றுவிப்பாளர் தரம் II ஆகியோரால் ஆண்டொன்றிற்கு குறைந்தபட்ச மாணவர் தொடர்பு நேரம் தனிப்பட்ட நேர அட்டவணையில் முறையே 180, 300, 360, 380, 450, 480 மற்றும் 510 மணிநேரங்கள் என பிரதிபலிக்க வேண்டும். கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் 6 பீடங்களில் உள்ள 140 கல்விசார் பதவியணியினரிற்கு 55,000 மாணவர் தொடர்பு நேரம் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும், மேற்கூறிய விதிமுறைகளில் 43 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 23,665 மணிநேரம் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், மாணவர் ஆராய்ச்சி அல்லது தொழில்துறை வேலைவாய்ப்பு, மருத்துவப் பணிகள் மற்றும் கல்வி ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் மேற்பார்வைக்கான பணி விதிமுறை ஒதுக்கீட்டை நிரூபிப்பதற்கு எந்த அறிக்கையும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறாததால் மொத்த மாணவர் தொடர்பு நேரம் மற்றும் கல்விசார் பதவியணியினரின் மொத்த பணிச்சுமையை பிரதிபலிக்கும் பணி விதிமுறைகளின் அடிப்படையில் பல்கலைக்கழகம் ஒரு வழிகாட்டலை உருவாக்கியுள்ளது என்பதைக் கண்டறிய முடியவில்லை. | பதவியணியினரின் மொத்த பணிச்சுமையை பிரதிபலிக்கும் வகையில் விரைவில் தயாரிக்கப்படும். | வகையில் பணி விதிமுறைகளின் (work norms) அடிப்படையில் ஒரு வழிகாட்டலை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கலைமானி, வணிக நிர்வாகமானி மற்றும் வணிகமானிக்கான வெளிவாரி பட்டப்படிப்பு நிகழச்சித்திட்டங்களுக்கான மாணவர் வழிகாட்டி புத்தகங்களின் பிரகாரம் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கான குறைந்தபட்ச காலப்பகுதி 03 கல்வி ஆண்டுகள் ஆகும். எனினும், மேற்படி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் 05 முதல் 07 வருடங்கள் வரையான குறைந்தபட்ச காலப்பகுதியை பூர்த்தி செய்வதற்கு எடுத்திருந்தன. பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்படுவதால் மாணவர்களின் தொழில் மற்றும் வேலை | விடைத்தாள்களிற்கான புள்ளிவழங்கலை பூர்த்தி செய்வதற்கு காலம் எடுத்ததால் இந்த முக்கிய தாமதம் ஏற்பட்டது. | குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாய்ப்புக்கள் மோசமாகப் பாதிக்கப்படும். | | |
| (இ) | கடந்த ஆண்டுகளில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு ஆராய்ச்சி படி செலுத்தப்பட்டுள்ளதுடன் மீளாய்வாண்டில் மாத்திரம் செலுத்தப்பட்ட ஆராய்ச்சி படி ரூபா 80,871,935 ஆகும். எனினும் கண்டுபிடிப்புக்களுக்கான காப்புரிமை போன்ற புலமைச் சொத்து பெறப்பட்டிருக்காததுடன் ஏனைய எந்த சாதனைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் ஆராய்ச்சி படி செலவினத்தின் மூலம் நாடு அல்லது பிராந்தியம் எந்தவொரு பங்களிப்பையும் பெற்றிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | எமது பதவியணி உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க ஆராய்ச்சியின் காரணமாக எதிர்கால கண்டுபிடிப்புகள் மற்றும் காப்புரிமைகளுக்கான வாய்ப்பு உள்ளது. | ஆராய்ச்சியிலிருந்தான கண்டுபிடிப்புகளுக்கான காப்புரிமையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் Webometrics தரவரிசைகளின் பிரகாரம் 2022 இல் பல்கலைக்கழக தரவரிசை 13 இலிருந்து 16 ஆக பின்தங்கியிருந்தது. | Webometrics தரவரிசையை முன்னேற்றுவதில் பல்கலைக்கழகம் கவனம் செலுத்துகிறது. | பல்கலைக்கழக தரவரிசையை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | பல்கலைக்கழகத்தின் தற்போதைய பாடங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் தொழில் சந்தை மற்றும் நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு ஏற்றவாறு நாளதுவரையாக்கப்பட வேண்டும், மேலும் பாடத்திட்டத்தில் தொழில்நுட்ப பாடங்கள் மற்றும் மொழி திறன்கள் ஆகியவை எப்போதும் மாறிவரும் தொழில் சந்தைக்கு ஏற்றவாறு உள்ளடக்கப்பட வேண்டும். எனினும், முகாமைத்துவ மற்றும் வணிக பீடத்தின் வணிக நிர்வாகமானி மற்றும் வணிகமானி பட்டப்படிப்பிற்கான பாடத்திட்டம் 2012 முதல் 09 ஆண்டுகளுக்கும் மேலாக திருத்தப்பட்டிருக்கவில்லை என்பதும், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தின் கலைமானி பட்டப்படிப்பிற்கான பாடத்திட்டம் 2005 முதல் 16 ஆண்டுகளாக திருத்தப்பட்டிருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. | தொடர்புடைய பங்குதாரர்களிடமிருந்து கருத்துக் கேட்கப்பட்டு மாறிவரும் போக்குகளைப் பிரதிபலிக்கும் வகையில் திருத்தங்களில் தேவையான மாற்றங்கள் இணைக்கப்பட்டுள்ளன. | தொழில் சந்தைக்கு ஏற்றவாறு பாடத்திட்டத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2017 முதல் 2020 வரையிலான காலப்பகுதியின் போது 20 அதிகாரிகளுக்கு ரூபா 6,545,485 தொகையான ஆராய்ச்சி | பதவியணியினரில் மூன்று பேர் தற்போது இறுதி அறிக்கையை இறுதி செய்து வருகின்றனர், | ஆராய்ச்சியை தாமதமின்றி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| மானியங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 10 அதிகாரிகள் 2022 யூன் 15 வரையிலும் ஆராய்ச்சியை பூர்த்தி செய்திருக்கவில்லை. | மேலும் ஏனைய மூன்று பேர் ஆராய்ச்சியை பூர்த்தி செய்வதற்கு கால அவகாசத்தை நீடிக்குமாறு கோரியுள்ளனர். | எடுக்கப்பட வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டில் ரூபா 10,221,473 கிரயத்தில் பெரிய களஞ்சியத்தின் (mega store) நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு 2021 பெப்ரவரி 23 இல் ரூபா 5.25 மில்லியன் கிரயமான மாற்றியமைக்கும் பணிகளுக்காக பொறியியல் வேலைத்தளத்திடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும், 2022 மே 26 வரையிலும் உபகரணங்களை நிறுவும் பணிகள் இன்னும் முன்னேற்றத்தில் உள்ளதால் வேலைத்தளம் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மிக அண்மைய எதிர்காலத்தில் இந்த அணி Semester 6 இற்கு நகரும் போது, E17 அணியின் மாணவர்களுக்கு இந்த உபகரணங்களை செயல் விளக்கமளித்தல் | இனியும் தாமதிக்காமல் கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 87,186,796 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஆய்வுகூட உபகரணங்கள் 02 முதல் 05 வருடங்கள் வரையான காலமாக விளைவற்றிருந்தன. | கருவிகள் கிடைக்காததால் CNC Turning நிலையம் பயன்படுத்தப்படவில்லை. | உபகரணங்களை செயற்திறன் மிக்க முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மல்வத்தை விவசாய தொழில்நுட்ப பூங்கா உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான ஒப்பந்தம் 2021 மார்ச் 29 இல் ரூபா 138,444,958 ஒப்பந்த பெறுமதியில் வழங்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2022 யூன் 28 இல் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டது. ஆனால் பௌதீக முன்னேற்றம் 35 சதவீதமாகவே காணப்பட்டதுடன் ரூபா 56,273,588 ஒப்பந்த பெறுமதியுடன் கூடிய 09 வேலை அலகுகள் 2022 மே 01 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது பணிகளை தொடங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. | மேலும் தாமதம் இன்றி நிர்மாணத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 ஆம் ஆண்டுக்கான மூலோபாயத் திட்டத்தின் பிரகாரம் ஆறு இலக்குகளின் கீழ் தொண்ணூறு செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டது. அவற்றில் 17 செயற்பாடுகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. அதே நேரம் ஒட்டுமொத்த பட்டதாரியின் திருப்தியின் முன்னேற்றங்கள்; புதிய கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் துறைகளை அறிமுகப்படுத்துதல்; பட்டதாரிகளின் தொழில்துறை பயிற்சியை பூர்த்தி செய்தல்; சர்வதேச இணை ஆசிரியர்களுடன் கல்விசார் பதவியணியினர் வெளியிடுதல் மற்றும் பதவியணியினரால் வெளியிடப்பட்ட சர்வதேச ஒத்துழைப்புடனான ஆராய்ச்சி கட்டுரைகள் என்பன குறைந்த அளவில் இருந்தன. | கொவிட்-19 மற்றும் திறைசேரியிடம் இருந்து பெறப்பட்ட வரையறுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ஆகியவை வரையறுக்கப்பட்ட முழு அளவிலான மூலோபாய அமுல்ப்படுத்தலீற்கு மாற்றப்பட்டுள்ளன. | இலக்குகளை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |